உ

கடவுள் துணை

திருஞான சம்பந்தர் கொலைபாதகரா?

சுயமரியாதைச் சம்பாஷிணைகள்

இஃது

சென்னை "தேசபந்து" ஆசிரியரும்,
ஆஸ்திகச் சங்கத் தலைவரும், உயர் திருவாளர்
சதாவதானம்

தே. கிருஷ்ணசாமிப் பாவலர்

அவர்கள் (30-3-1929) "தேசபந்து"வில் எழுதியது.

பிரசுராலயம்:
"தேசபந்து" புத்தகசாலை
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

புத்தகம் விற்குமிடம்:—
ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை
நெ. 4/34, ஈயினியப்ப நாயக்கன் வீதி,
பார்க் டவுன் (P. O.), சென்னை.

1929

ஸ்ரீ வான்மீகி மஹரிஷி அருளிச்செய்த

ஆநந்த ராமாயண வசனம்

[திருத்தமான நான்காம் பதிப்பு]

இந்நூல் உமாமஹேஸ்வர சம்வாத ரூபமாக 109 சருக்கங்களும், 12,252 கிரந்தத் தொகையும் கொண்ட 9 காண்டங்களாக உள்ள இதனை வடமொழியிலிருந்து தமிழ் மொழியில் ப்ரஹ்மஸ்ரீ வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதியார் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. இதில் கௌசல்லியையின் சுயம்வரம், தசாதரின் சரிதம், ஸீதையின் சுயம்வரத்திற்கு இராவணன் வருதல், வான்மீகி மஹரிஷியின் சரித்திரம், ஸீதை இலங்கைக்குச் சென்று சதகண்ட இராவணன் முதலியவர்களை ஜயித்தல், ஸ்ரீராமர் துதி-கவசம், ஸீதா தேவியின் துதி-கவசம், ஸ்ரீ ராமாஷ்டோத்தாம், ஸ்ரீ மகாவிஷ்ணு ஸ்தோத்ரம், லட்சுமண சக்தி, சரசேது பந்தனம், ஸ்ரீராமர் கதையின் மகிமை, குசலவர்களின் பராக்கிரமம், பாபங்களின் பிராயச்சித்தம், ஸ்ரீராம நாமத்தை ஜபிக்கும் முறை, ஸீதா தேவியின் பாதிவிருத்திய மகிமை, ஸ்ரீ ராமபிரானின் ஏக பத்தினி விரத மகிமை, வேறு சில அபூர்வ விஷயங்களும், மந்திரங்களும், கிரந்த சுலோகங்களும், அதன் தமிழ் மொழிபெயர்ப்பும் அடங்கியுள்ளன. இஃது ஒவ்வொரு சகோதர சகோதரிகளின் இல்லத்திலு மிருத்தற்குரிய பொக்கிஷமாகும். 9 காண்டங்களும் ஒரே காண்டமாக உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் பைகா எழுத்தில் பிழையறச் சுத்தப்பதிப்பாக அச்சிடப்பெற்றது. 13 ஐதீகப்படங்களுடன் கண்ணைக் கவரும்படியான முழு காலிகோ பயின்டுடன் கூடிய இந்நூலின் விலை ரூபா 6.

உயர்ந்த பெதர்வேயிட் காகிதத்தில் அச்சிடப்பட்டது விலை ரூ. 12.

ஆசிரியரின்றித்

தானே ஜோதிடம் தெரிந்துகொள்ள வேண்டுமோனல்?

ஜோதிட ஆசிரியன்

இது ப்ரஹ்மஸ்ரீ மத்தூர்-வெங்கடரமணாச்சாரியார் அவர்கள் எழுதியது. இதில் ஜோதிடர் உதவியின்றி ஜோதிடங் கற்றுக்கொள்ளக்கூடிய சகல ஆதாரங்களையும் ஆசிரியர் சுலபமாய் 212 விஷயங்களாக எடுத்துக் காட்டியிருக்கின்றனர். இதனைப் படித்துணர்பவர் தாமே சுபமுகூர்த்தம் நியமித்துக்கொள்ளவும், கோசார பலன் உரைக்கவும், ஜாதகம் கணிக்கவும், பலன் கூறவும் திறமையுடையவராவர். விலை ரூபா ஒன்று.

(தபாற் க... வேறு)

திருஞான சம்பந்தர் கொலை பாதகரா?

[சென்னை "தேசபந்து" பத்திராசிரியரும், சென்னை ஆஸ்திகச் சங்கத் தலைவருமான ஸ்ரீமான் திருவாளர்—சதாவதானம் தெ. கிருஷ்ணசாமிப்பாவலர் அவர்கள் தமது 'தேசபந்து'வில் (30-3-1929)-ல் எழுதுவது.]

'வேதநெறி செழித்தோங்க மிகுசைவத் துறை விளங்க'

திருவவதாரம் செய்த எங்கள் சிவக்கொழுந்தை, திருஞானசம்பந்தப் பெருமானை, இக்கால தீயமாக்கள் வெளிப் போந்து; அருளற்றவர் என்றும், அறக்கொடியர் என்றும், கொலைபாதகர் என்றும் கத்துவதைக் காதுகொடுத்தும் கேட்கின்றோம்; கண்களால் அப் பட்டிமாக்கள் எழுதுவனவற்றைக் காண்கின்றோம்; வாயால் கூசுதலற்றுப் படிக்கவும் செய்கின்றோம்; சைவர்கள்என்றும்உலாவித் திரிகின்றோம். அந்தோ! தாய்மரபு தந்தைமரபு தெரியாத தான்தோன்றிக் கூட்டத்தினர் இங்ஙனம் அகங்காரம் கொண்டு சொல்வனவற்றையும் எழுதுவனவற்றையும் கண்டித்தெழுதுமாறான பணியையோ இறைவன் எனக்கு அளித்தல்வேண்டும்! பல அன்பர்கள், கல்வியறிவு சிறிதும் இல்லாத இக்கயவர் கூற்றைக் கண்டித்தெழுதும்வண்ணம் என்னைப் பலகாலும் இடித்தெழுது

கின்றனரே! எம்பெருமானை, அன்பே உருவான அருட் குழவியை, அம்மையின் திருமுலைப்பால் உண்டு அமுதவாரிதியைத் தமிழ்நாட்டில் பெருகுவித்த எங்கள் ஐயனை, ஆளுடைய பிள்ளையை: மூளையற்ற மடையர்கள் ஏதோ உளறி வழிந்தால், அதையுமோ நாம் பொருட்படுத்தவேண்டும்? இங்ஙனம் கூறும் மூர்க்கர்கள், உண்மையில் உண்மையறியும் வேட்கை யுடையவர்கள் அன்றே! மடையர்களாகவும், நாடோடிகளாகவும், போக்கிரிகளாகவும் பூர்வாஸ்ரமத்தில் இருந்தவர்கள் எல்லோரும்: இதுபோது மேடைப்பிரசங்கிகளாகவும், தலைவர்களாகவும் வந்து தங்களைப்பிறர் பெரியவர்கள் என்று நினைத்துக்கொள்ளட்டும் என்ற எண்ணத்துடன், இவ்வாறு நமது பெரியோர்களை நிந்தனை செய்கின்றனர் என்பதை எவரே அறியார்? இவர்கள் நம் பெரியோர்களை நிந்திக்கும் காரணமாக: இனி கழுதைகளாகவோ, பன்றிகளாகவோ, நாய்களாகவோ பிறப்பெடுப்பார்கள் என்பது நமது சாஸ்திர உண்மையே எனினும், இதுகாலையிலேயே அவர்கள்: கழுதைகளாகவும், மலமுண்ணும் பன்றிகளாகவும், ஈனசாதி நாய்களாகவுமே நம்மிடையில் மதிக்கப்படுகின்றனர்.

இந்து மதத்தினரே! இந்தப் பாதகர்கள் திருஞானசம்பந்தப் பெருமானை மட்டுமென்று, நமது வணக்கத்திற்கு உரியவர்களாகிய நமது பெரியார்களை, ஞானப்பிழம்பான நமது ஆழ்வாராதியரை வாய்க்கு வந்தவண்ணம் இகழ்கின்றனரே! உங்களுக்கு இரத்தம் கொதிக்கவில்லையா? உங்கள் பொன் பெண் பணிமுதலானவற்றிலும் நமது மதம் சிறப்புடையது எனக் காத்தல் உங்கள் கடமையல்லவா? எங்கே போயது உங்கள் ஆண்மை? எங்கே போயது உங்கள் மானம்? உங்கள் மானம் போனபின் உயிரிருந்தென்? இறந்தென்? நீங்கள் இந்தப்

புழுத்த நாயினும் கடைகெட்ட மாக்கள் கூற்றைக் கேட்டும் வாளா இருக்கும் மாண்புதான் என்னே! அவர்கள் உங்களிடையே இவ் விஷயங்களைக் கக்குவதுடன் அமையாது, ஒன்றுமறியாத பள்ளிப்பிள்ளைகளிடையேயும் இத் தீய உணர்ச்சியை உண்டுபண்ணிவிடுகின்றனரே!

ஏ நாத்திகப் பதர்களே! உங்களுக்கும் ஒருகாலம் வந்ததே! கல்வி யில்லை, கேள்வி யில்லை—ஒன்று மில்லை. தடிமரங்கள்போல் சபைகளில் பேச வந்துவிட்டீர்கள்! இவ்வளவையும் உண்மை யென ஒப்புக்கொண்ட உங்களுக்குச் சாஸ்திர விசாரணை யேன்? சமய விசாரணை யேன்? எங்கள் சமயாசாரியர்களைப் பழிக்கப் புறப்பட்ட புட்டுக்கூடை முண்டங்களில் பொறுக்கி யெடுத்த முழு முண்டங்களே! எங்கள் ஆளுடைய பிள்ளையை அருட்பிழம்பைக் கொலைபாதகன் எனக் கூறும் உங்கள் குறும்புதான் என்னே! இவ்வளவு வரையில் உங்கள் அகங்காரம் மேலிட்டதால் அன்றோ நான் வெளிக்கிளம்ப வேண்டியவனானேன்.

ஏ மடையர்களே! பின் விளைவறியாப் பேதைகளே! எங்கள் ஞானச்செல்வனை, எங்கள் உடல் பொருள் ஆவியைத் தனதாக்கிக் கொண்ட எங்கள் ஆண்டவனை, உம்போன்ற மடையர்களும் உள்ளன்புடன் படித்த அளவிலேயே உள்ளத்து மாசு போக்கி உணர்வே வடிவான இறைவனுடன் ஒன்றுக்கும் உபரிய நிலையை அளிக்கவல்ல ஆநந்தப் பாக்களை அருளிச்செய்த எங்கள் அப்பனை, தாவில் சராசரங்களெலாம் சிவம் பெருக்கும் பிள்ளையையும் பிறரையும் தூஷிக்க முன்வந்த உங்களை இனிச் சும்மா விடேன். ஒன்று உங்கள் கூட்டமாவது அடியுடன் இல்லாது மறைதல் வேண்டும்; அல்லது நானாவது மடிதல்வேண்டும். ஏ

மனித உருக்கொண்ட தடிமரங்களே! எங்கள் திருஞான சம்பந்தப் பெருமானை மதிக்க மதிதான் உங்கட்கேது? பகுத் தறிவு பகுத்தறிவு என்று கத்தும் உங்கள் குழுவினருக்குப் பகுத்தறி வுண்டாயின், பாழான இவ் வழியில் விழமாட்டீர் கள் அன்றோ?

தொண்டர்மனங் களிசிறப்பத் தூயதிரு நீற்றினெறி
எண்டிசையுந் தனிநடப்ப ஏழுலகுங் களிதூங்க
அண்டர்குல மதிசயிப்ப அந்தணரா குதிபெருக
வண்டமிழ்செய் தவநிரம்ப மாதவத்தோர் செயல்வாய்ப்ப.

—பெரியபுராணம்

திருவவதாரஞ்செய்த எங்கள் வள்ளலைக் கொலைபாதகன் எனக் கூறும் உங்கள் கொலைஞர் கூட்டம் கூண்டுடன் அழிந்துபட் டது!பட்டது! நான் தொழும் தெய்வமே திருஞானசம்பந்தன். அப் பெருமான் வேறு, உண்மையறிவானந்த உருவான எங் கள் இறைவன் வேறு அல்ல. நீங்கள் அவதாரங்களின் அற் புதங்களை அறியும் ஆற்றல்தான் உண்டோ? தருமம் தேய் ந்து அதர்மம் வளரும காலையில் ஆண்டவன் அவதாரம் ஏற்படு வது உங்கள் மூளையில் ஏறுவிட்டால், மூளைதேடி முட்டிக் கொள்கிறதுதானே? வேதசிந்தனையும் சைவசிந்தனையும் மேலி ட்ட காலத்தே, இற்றைக்கு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளு க்கு முன் எங்கள் திருஞானசம்பந்தர் சீகாழிப் பதியில் திரு வவதாரம் செய்தனர். இவரை உங்கள் அறிவற்ற குழுவினர், ஆரியர் என்று கூறவந்த ஆதாரந்தான் என்ன? எங்கள் பெம் மானை ஆதிசங்கரர் தாம் அருளிய சிவாநந்தலஹரியில் திரா விடச் சிசு என்று கூறியுள்ளதை மடையர்களே! தெரிந்து கொள்ளுங்கள்! ஆரியர் ஒருவரே எங்கள் செல்வக்குழந்தை யைத் திராவிடச்சிசு என்று அழைக்கும் சான்று ஒன்று போ தாதோ, அவர் தமிழர் என்பதை வற்புறுத்த? தமிழர்களையே

வாழ்விக்க வந்ததாக வாய்கொழுத்துப் பேசவந்த வகைகெட்ட முண்டங்களாகிய உங்கள் மூளையில், தமிழரை, தமிழர் தெய்வத்தைத், தமிழ்ப் பெரும் புலவனைக் குறை கூறுகின்றோமே என்ற எண்ணம் எங்கிருந்து வரும்? திருஞானசம்பந்தர், தமது மூன்றாவது ஆண்டில், ஞானப்பாலுண்டு பாடினார் என்பதற்குப் புறச்சான்று வேண்டும் என்கிறீர்? வேதம் இல்லை, சமயம் இல்லை, கடவுள் இல்லை யென்ற உங்களுக்குப் புறச்சான்று எதற்கு? எங்கள் சமயத்தின் உண்மை விளங்கினால் அன்றோ, உங்களுக்குத் திருஞானசம்பந்தர் மூன்றாவதாண்டில் ஞானப்பாலுண்டு பாடியது உண்மையென்பது பெறப்படும். எங்கள் இறைவன் நினைத்ததைச் செய்து முடிக்கும் ஆற்றல் அமைந்தவன்; அவனால் முடியாத காரியம் ஒன்றுமில்லை. அவன் சாதாரண மக்கள் செய்வனவற்றையும் செய்வன்; செயற்கரியனவற்றையும் செய்வன்; எனவே, இறைவன் அவதாரமான எங்கள் திருஞானசம்பந்தர் மூன்றாண்டில் பராசக்தியின், லோகமாதாவின் ஞானப்பாலுண்டு அமுதப்பாடல்கள் பாடியதில் என்ன ஐயம் ஏற்படுகிறது? ஆம், உங்களுக்கு இறைவனை யில்லாத போது இக்கூற்று உடம்பாடாகாதுதான். எ முழு முண்டங்களே! மேனாட்டு வைத்ய சாஸ்திரிகள் எழுதிய நூல்களுள் ஒன்றாகிய புலோரல் எழுதிய ஆராய்ச்சி நூலில் மூன்று வயதுடைய ஆண்குழந்தை பெண்ணின்பத்தை விரும்பித் தொழில் புரிந்தது என்று எழுதிய விஷயத்தைப் பொய் யென்று நீங்கள் சொல்ல முன்வருவீர்களோ? வந்தால், உங்களை மூளைகெட்ட முழுமுண்டங்களென்று அவர்கள் உங்கள் முகத்தில் காரி உமிழ்வார்களே! மூன்றாண்டில் போக இச்சை எங்கேனும் உண்டாக இயலுமா? இது கட்டுக்கதை யென்றன்றோ பலரும் நினைப்பர். கண்டதாக எழுதியதற்குப்

பொறுக்கிபெடுத்த முண்டங்கள்மேலும் புரச்சான்றுவேண்டு மெனப் பகரும்போதும்.

இனி, அப் பெருமானைக் கொலைபாதகர் என்று மடையர்கள் கூறும் கொள்கையை ஆராய்வோம். இதை நாம் வெட்டிப்பேசுவதா? அன்றி ஒட்டிப்பேசுவதா? படியாத மடையர்களே! இவ்விஷய மொன்றை வெட்டிப்பேசியும் ஒட்டிப் பேசியும் உங்கள் வெள்ளறிவை வெளிப்படுத்துகிறேன்.

திருஞானசம்பந்தர்: சமணரைக் கழுவேற்றினர்—ஆதலின், அவர் இரக்கமற்றவர், அருளற்றவர், ஜீவகாருண்யமற்றவர், கொலை பாதகர் என்று சொல்கிறீர். நீங்கள், சமணரைக் கழுவேற்றினர் என்பதை எங்குத் தெரிந்துகொண்டீர்? இதுபோன்றவிஷயங்கட்குச் சரித்திரங்கள் ஆதாரமா, அல்லது புராணங்கள் ஆதாரமா? சமணர் கழுவேற்றப் பட்டார் என்பதற்கும்,இராமாநுஜர் மைசூருக்குப்பயந்தோடிப் போய் மறைந்துகொண்டார் என்பதற்கும் சரித்ர வாயிலாக ஆதாரம் ஒரு சிறிதும் இல்லை. தேவாரத்திலும் ஒரு சொல்லேனும் கிடைபாது. இச் சம்பவங்கள் நிகழ்ந்ததாகக் கூறும் காலம், இந்துதேசச் சரித்திரகாரர்களுக்குப் புறம்பானதல்ல.திருஞானசம்பந்தப்பெருமான் இருந்தகாலம், ஆறுவது நூற்றாண்டின் முற்பகுதியே யாகும். இந்த முற்பகுதியில், அதாவது திருஞானசம்பந்தரது காலத்தில், சீனதேசத்து யாத்ரிகராகிய ஷயோன்ஸ்டன் என்பார் வந்திருக்கிறார். அவர் கி. பி. 640-ம் ஆண்டில் இந்த நாட்டில் வந்தனர் என்பதும், அக்காலையில் நமது நாட்டு நிகழ்ச்சிகள் பலவற்றையும் விடாது தமது குறிப்புப் புத்தகத்தில் எழுதினர் என்பதும் மறுக்கப் படாதனவாகும். எண்ணாயிரம்சமணரைக் கழுவேற்றியது உண்மையாக விருந்தால், இதுசாதா

ரண சம்பவம் என்று அவர்விட்டிருக்கமாட்டார். அன்றியும், புராணங்களை ஆதாரமாகக்கொண்டு சொல்கிறோம் என்றால், எந்தப் புராணம் ஞானசம்பந்தரே கழுவில் எற்றியதாகச் சொல்கிறதென்று கேட்கிறேன். திருஞானசம்பந்தரது பிரபாவங்களைக் கூறும் புராணங்கள் பல. அவற்றுள் பரஞ்சோதியார் அருளிய திருவிளையாடற் புராணம் தவிர மற்றையவெல்லாம், சமணர் கழுவேறிய கதையென்றே சொல்கின்றன. திருப்பெருந்துறைப் புராணத்துள், சமணர்கள் கழுவேறிய படலம் என்றே உளது. இந்தப் பரஞ்சோதியாருக்கு முன் நானூறு வருஷங்களுக்கு முன்னிருந்த பெரும்பற்றப்புலியூர் நம்பி பாடியருளிய திருவிளையாடல் உள்ளும் அவ்வாறே உள்ளது. இனி பரஞ்சோதியார் அருளிய திருவிளையாடலிலும், பிள்ளையார் இரக்கமற்றவராய் இருந்தனர் என்பது காட்ட ஒரு ஆதாரமும் இல்லை. அவர் அருளே உருவாய் அமைந்தவர் என்பது பின்வரும் கதையால், சாமான்ய அறிவுபடைத்தவர்களும் தெரிந்துகொள்வர். பாண்டியமன்னன் சமண சமயத்தில் ஈடுபட்டிருப்பது கண்டு வருந்திய அவனது மனைவியாகிய மங்கையர்க்கரசியார் பிள்ளையாரை வரவழைத்தார். திருஞானசம்பந்தப்பெருமான் தமது பதினாறுயிரம் திருக்கூட்டத்தாரோடு மதுரைப் பதியடைந்தனர். சுவாமிகள், தமது அடியாருடன் தங்கியிருந்த மடத்தில், கொல்லாவிரதிகளென மேல் வேஷம் போட்ட சமணர்கள் தீ வைத்தனர். எங்கள் பெருமான் தங்களைக் கொல்லவந்த சமணர்களுக்குப் புத்தி கற்பித்தல் கூடாதென்பது அற ஒழுக்கம் போலும்! ஒருவன் தனக்குத் துன்பம் செய்வானானால் அவனைப் பொறுக்கவேண்டுமென்பது அறிஞர் கடனே. அவனே, ஒரு கூட்டத்தினருக்குத் தீங்கை விளைவிப்பானாயின் எதையும் செய்யலாம் என்

பத அறநெறியே. கொலையும் செய்யலாம், பொய்யும் பகர லாம். ஆனால், அச் செய்கைகளால் பிறர்க்கு நன்மை உண் டாதல் வேண்டும். இதுபற்றியே, நமது தெய்வப் புலவ ரும்,

திருக்குறள்-அறத்துப்பால் துறவியல் அதி-கூ0-வாய்மை-உ-குறள்.

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்."

என்று கூறினர். தனக்கென எவனேனும் இச் செயல் களைச் செய்தலாகாது என்பதே அறநெறி. பிறர் நன்மையை நாடிச் செய்யும் இக் கார்யங்கள் கூடா என்றால், தமிழ் நூல்களுள் கூறிய அறப்போர்களுக்கும் பொருள் இல் லாது போய்விடும். துஷ்டநிக்ரஹம் செய்வது, ஒரு சமூ கத்தின், ஒரு நாட்டின் நன்மைக் கேற்றதாயின், அது செய்தலாகாதெனக் கூறுவோர் மடையர் அன்றோ? தன் னல எழுச்சிகொண்டு, இத் தொழிலைச் செய்தல் கூடா தென்பதே கருத்து. எமது திருஞானசம்பந்தர் என்ன தன்னலம் கொண்டு இக் கார்யத்தைச் செய்தார் என்று சொல்ல முடியும்? இனி, அப் பெருமான் அத் தொழிலைச் செய்யவேயில்லை யென்றுதானே, சரித்திர மும் புராணங்களும் சொல்லுகின்றன. கழுவேற்றிய படலம் என்றுகூறிய பரஞ்சோதியாரும், எங்கள் பிள்ளையாரது கரு ணையை வெளிப்படுத்தனரே யன்றி, அப்பழியைஅவர்மேல் ஏற்றவில்லையே. சுவாமிகள், தங்கள் கூட்டத்தாரை அழிக்கச் சமணர்கள் எழுப்பிய தீயைக் கண்டு, பாண்டியனை நல்வழிக் குக் கொண்டுவரும் உயர் நோக்குடன், "அத் தீ எங்களை ஆதரி யாது, எங்களுக்கு இன்னல் விளைக்கக் காரணமான மன் னனைப் பையவே அடைக" என்றார். உடனே பாண்டியன் வெப்பு நோய் அடைந்தான். சமணர்கள், தங்கள் வைத்திய மந்திர சிகிச்சையைக் கையாடினர். ஒன்றும் பலிக்கவில்லை. கடைசி

யில் எமது பெருமான், அவ் விரக்கமற்ற சமணர்களிடையே திருநீறு கொண்டு மன்னது வெப்பு நோயைப் போக்கினர். மேலும் சமணர்களுக்குப் பொருமை பொங்கியது. பிள்ளையாரை வாதுக் கழைத்தனர்; தீயில் ஏடிடவேண்டு மென்றனர். சமணர் இட்ட ஏடு தீய்ந்து சாம்பராயது; பிள்ளையார் இட்ட ஏடு பச்சைப்பசேர் என்று இருந்தது. மன்னவன்: ஸ்வாமிகள் பக்தனுனன்; சமணர்களை வெகுண்டான். சமணர், ஸ்வாமிகளை மூன்ரு முறையாக வாதுக் கழைத்தனர். மற்றையோர் வேண்டாமென்ற காலையிலும் பிள்ளையார் இசைந்தனர். இம்முறை ஒவ்வொருவருடைய கொள்கையையும் எழுதி நீரில் இடவேண்டும் என்பதும், உண்மைக் கொள்கையுடைய ஏடு எதிரேற வேண்டும் என்பதும் சமணர் விருப்பம். தள்ளையார் உடன்பட்டார். இரண்டு ஏடுகளும் வைகையாற்றில் இடப்பட்டன. பிள்ளையார் ஏடு எதிரேறியது. சமணர்கள் தோற்றதால் ஒப்பந்தப்படி கழுவேற வேண்டியதே. அதுகாலை திருஞானசம்பந்தர் வாக்காகப் பரஞ்சோதியார்:

“இன்னும் அறத்தால் இசைக்கின்றேன்
 நீர்என் வாளா இறக்கின்றீர் ?
அன்னை யனையான் எம்மிறைவன்
 அவனுக் காளாய் உய்ம்மின்கள் !
என்னை யேடா சிறியாய்நீ
 எவ்வா எங்கட் கிவ்வா றடாதமொழி
சொன்னு யென்று மானமுளோர்
 கழுவி லேறத் தொடங்கினுர்.”

—திருவிளையாடற்புராணம்

என்று சொல்கின்றனர். இதனுல் அதுபோதும் ஸ்வாமிகள் அருளுடன் கூடியவராய், ‘எதற்காக நீங்கள் வீணுகச் சாகப்

போகிறீர்கள்! தாயினும் கருணையுடைய எங்கள் இறைவனைப் போற்றுங்கள்! என்றுதானே சொல்வதாகச் சொல்கிறார். கடைசியாக மானமுடைய ஒருசிலர் தாமாகவே கழுவில் ஏறியதாகச் சொல்லப்படுகிறது. கழுவேற்றிய படலம் என்ற பரஞ்சோதியார் திருவிளையாடலிலும் சமணர் தாங்களே, அவர்களுள்ளும் மானமுள்ள ஒருசிலர் தாங்களே கழுவேறினர் என்றும், மற்றையோர் திருநீறு அணிந்து வைசராயினர் என்றுமே சொல்லப்பட்டுள்ளது. இனி, பெரிய புராணத்துள்ளோ, ஸ்வாமிகள் முதலில் பாண்டியனது வெப்புநோயைத் தீர்த்தும், தீயில் ஏடிட்ட வாதத்தில் வென்றும், மேலும் சமணர்கள் அவரை மற்றொருவகை வாதத்திற் கழைத்ததாகவும், அதுபோது குலச்சிறையார் என்னும் பாண்டியனது மந்திரியார், வாதத்தில் இம்முறை தோற்றவர் என் செய்வதென்ன? பொறாமை காரணமாகத் தங்கள் வாய் சோர்ந்து தாமே தனிவாதில் அழிந்தோமாகில், வெங்கழுவேற்றுவா னிவ்வேந்தனே என்று சமணர்கள் கூறியதாக உள்ளது. ஈண்டும் கழுவேற்றிய விஷயம் ஸ்வாமியின்மேல் ஒருசிறிதும் ஏற்படவில்லை. தெய்வப்புலமைச் சேக்கிழார், அது செய்தது மன்னவனே யென்பதை,

“மன்னவன் மாறன் கண்டு மந்திரியாரை நோக்கித்
துன்னிய வாதி லோட்டித் தோற்றவிச் சமணர் தாங்கண்
முன்னமே பிள்ளை யார்பா லனுசித முற்றச் செய்தார்
கோன்னுனைக் கழுவிலேற முறைசெய்க.”

—பெரியபுராணம்

என்று கூறிப்பவற்றால் அறியலாம். இனி, அங்ஙனம் வன்னெஞ்சம் கொண்டு அத் தொழிலைச் செய்ய ஏவிய மன்னனுக்கு, ஸ்வாமிகள் கருணையிருந்தால், புத்தி சொல்லலாகாதோ என்பர். கள்ளர்களுக்கும் கொலைஞர்களுக்கும் இது காலையில் நீதிபதிகள் தூக்குத் தண்டனைகளைத் தந்தால், அவர்களையும் இரக்கமற்றவர் கொலைபாதகர் என்று இந்த மதி

யற்ற மடையர்கள் சொல்வார்கள் போலும். மன்னன் ஏவிய காலையில், ஸ்வாமிகள் அவனைத் தடைசெய்யாதிருந்ததற்கும் தெய்வச் சேக்கிழார் காரணம் கூறாமற் போகவில்லை. இது போன்ற ஆபாசக் கேள்வியைக் கேட்கும் மடையர்களும் இருப்பரென்பது அவர் அறியாததன்று. அதுபற்றியே அவர்,

"புகலியில் வந்த ஞானப் புங்கவர் அதனைக் கேட்டும்
இகலில ரேனினும் சைவ ரிருந்துவாழ் மடத்திற் றீங்கு
தகவிலாச் சமணர் செய்த தன்மையாற் சாலு மென்றே
மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடா திருந்த வேலை."

என்ற பெரியபுராணப் பாசுரத்தால் விளக்கியருளினர்.

சைவர் கூட்டத்தைத் துன்புறுத்திய காரணம்பற்றியே, மன்னன் செய்கை மிகையாகாது என்று பிள்ளையார் வாளா இருந்தனர் என்பதனாலும் அவரது அருட்குணம் விளங்கவில்லையா?

நமது நாட்டில் இதுபோது நீதிச்சபைகளில் கொலைஞரைக் கொல்வது எதுபற்றி? நாட்டிற்கோ சமூகத்திற்கோ அவர்கள் இருப்பது கேட்டை விளைவிப்பது ஆகும் என்றகொள்கையுடனன்றோ? ஜீவகாருண்யமுள்ள நீதிபதிகளும் கொலைஞர்களுக்குத் தண்டனை விதிக்கின்றனர். எனவே, மன்னனைத் தடை செய்யவில்லை பிள்ளையார் ஆதலின், அவர் கொலை பாதகர் என்று சொல்வதில் என்ன உண்மை யிருக்கிறது? எனவே, இந்த மடையர்கள் தங்களுக்குத் தாங்களே படுகுழி வெட்டிப் பாழ்நரகில் இடம் செய்துகொண்டனர் என்பதை இனியேனும் தெரிந்து மௌனம் சாதிப்பார்களாக!

" பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் மாவியும் ஆண்டோன்றில்-மாய்ந்திடுஞ்
சத்தியம் ஈது சதாநந்தி தாளே."

—திருமந்திரம்

திருஞானசம்பந்தப்பெருமான் திருவடி வாழ்க.

எழுமின்! அன்பர்களே !! எழுமின் !!!

இன்றே எழுமின்!!!

[இஃது சென்னை "தேசபந்து" (வாரப்,பத்திரிகை 18-5-1929)லிருந்து எடுக்கப்பட்டது.]

சமயம் என்னும் பெயரைத் தனக்கே உரிய தனிப் பெருஞ் சமயமாம் சைவசமயத்தவரே! சுயமரியாதை என்னும் புனிதப்பெயரை வைத்துக்கொண்டு, நாட்டிடை அவமரியாதையைப் பரப்பும் அறிவில்மாக்கள் காழிவேந்தனை, கவுணியர் கோவை, கண்கள் மூன்றுடையான் காதல் மகனை, ஞானசம்பந்தனைக் கொலைபாதகனெனக் கூறித் திரிதலை நீவீர் அறிவீரோ? அங்ஙனம் அவர்கள் கூறுவது உங்கள் உள்ளத்தைச் சுடவில்லை? உடலைச் சுடவில்லையா? அன்பர்களே! அவர்கள் வாயை யடக்கிச் சுயமரியாதை யென்னும் சூழ்ச்சியை நாட்டை விட்டோட்ட இன்றே எழுமின் ! இன்னே எழுமின்!! இசைமிகப் பெறுமின்!!!

ஆஸ்திக சங்கத்தார்.—

உ

கடவுள் துணை

சுயமரியாதைச் சம்பாஷணை

[சென்னை: "சித்தாந்தம்" பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.]

அழகப்பன், முருகப்பன் என்ற இரண்டு நண்பர்கள் ஒருநாள் சாயுங்காலம் சென்னைக் கடற்கரையில் உட்கார்ந்துகொண்டு பேசியதின் சுருக்கம் பின்வருமாறு:—

முருகப்பன்—அழகா! நேற்று நீ செங்கல்பட்டு சுயமரியாதை மகாநாட்டுக்கு வராமற்போனாயே, ஆ! ஆ! என்ன கூட்டம்! என்ன வேடிக்கை! என்ன பேச்சு! என்ன அருமையான தீர்மானங்கள்!

அழகப்பன்—என்ன? என்ன? விவரமாய்ச் சொல்! கேட்போம்.

மு—நேற்று இரவிலிருந்து நான் திருநீறு அணிவதை விட்டுவிட்டேன். நீ அதைக் கவனித்தாயா?

அ—ஏன் உன் வீட்டில் திருநீறு ஆய்விட்டதா? பழனியிலிருந்து நல்ல வாசனை விபூதி வந்திருக்கிறது. ஒரு படி தருகிறேன், வேண்டுமா?

மு—நீயே வைத்துக்கொள். நாங்களெல்லாம் கை தூக்கி, திருநீறு - நாமம்-சந்தனம் முதலியவைகள் ஒன்றும் நெற்றியில் அணியக்கூடாது என்று தீர்மானித்துவிட்டோம்.

அ—ஏன்? ஆபீசுக்குப் போகும் அவசரத்தில் இதற்காகத் தாமதமாய்விடும் என்று இப்படிச் செய்தீர்களா?

மு—இல்லை, இல்லை. இவைகளை நெற்றியில் அணிவதினால் சமயப் பிணக்கு உண்டாகிறதே தவிர நன்மை ஒன்றை

யும் காணோமே. மேலும், ஏதோ இவைகளில் தத்துவார்த்தங்களெல்லாம் சொல்லுகிறார்களே; அவைகளில் எனக்கு அணுவளவும் நம்பிக்கை யில்லை.

அ—நெற்றியில் திருநீறிட்டால் சமபப்பிணக்கு எப்படி வரும்? எனக்குத் தெரியவில்லையே?

மு—என்ன! நீ காஞ்சிபுரம் வரதராஜ ஸ்வாமி கருட சேவைக்குப் போனதில்லையோ? அங்கே அப்போது பார்த்தால் தெரியும் வேடிக்கை. வடகலை தென்கலை இரண்டும் விஷ்ணுமதம்தானே! அதற்குள் எவ்வளவு சண்டை தெரியுமா?

அ—என்ன சண்டை? சொல்! கேட்போம்.

மு—ஏதோ சில பாட்டுக்களை முதலில் யார் பாடுவது என்று பலமாகச் சண்டை. முதலில் பாடுவதில் ஏதோ ஓர் உயர்வு இறக்கிறதாம். மேலும், முதலில் பாடுகிறவர்களுக்கு முதலில் மாலை மரியாதைகளெல்லாம் நடக்கிறதாம். இதற்காகத்தான் சண்டை.

அ—நீ சொல்வதிலிருந்து நாம வேறுபாட்டினால் சண்டை வருவதாக இல்லையே? ஏதோ உயர்வு, மாலை மரியாதைக்காகத்தானே சண்டை செய்கிறார்கள்.

மு—என்ன இப்படிச் சொல்லுகிறாய் ? தென்கலை வடகலை என்ற இரண்டு பிரிவுகளில்லாவிட்டால் எல்லாரும் ஒரு கலையாய் ஒத்த மனதோடு சண்டையின்றிப் பாடலாம் அல்லவா?

அ—எல்லாரும் ஒருகலைநாமமே அணிந்தாலும், யார் முதலில் பாடுவது, மாலை மரியாதை பெறுவது என்று சண்டை செய்யமாட்டார்களா? நாம வேறுபாட்டினால் இந்தச்

சாக்கை வைத்துச் சண்டை செய்கிறார்கள். இல்லாவிட்டால் வேறு சாக்கைவைத்துச் சண்டை செய்வார்கள்.

மு—ஆகையால், இந்த நாம வேறுபாட்டினால் சண்டைக்கு ஒரு சாக்கு ஏற்படுகிறது என்று நீ ஒப்புக்கொள்ளுகிறாயல்லவா? அதைத்தானே நானும் சொல்லுகிறேன்.

அ—ஒரு சாக்கு ஒழிந்தால் சண்டை ஒழியுமா? சண்டையை ஒழிப்பது உன் நோக்கமா, அதன் சாக்குகளில் ஒன்றை மட்டும் ஒழிப்பது உன் நோக்கமா?

மு—சண்டையை ஒழிப்பதுதான் நோக்கம். கூடியவரையில் இந்தச் சாக்குகளையெல்லாம் ஒழித்துவிட்டால் சண்டைதானே ஒழிந்துவிடுமல்லவா? இதென்ன இவ்வளவுகூடத் தெரியாமல் பேசுகிறாய்.

அ—உனக்கு இந்தச் சண்டையின் தன்மை விளங்கவில்லை. எனக்கு எத்தனையோ நன்றாய்ப் படித்த ஐயங்கார் சிநேகிதர் வடகலையிலும் தென்கலையிலும் இருக்கிறார்கள். அவர்கள் எந்த வகையிலும் வித்தியாசமில்லாமல் ஒற்றுமையாகவே இருக்கிறார்கள். அவர்கள் ஏன் சண்டையிடுவதில்லை?

மு—அவர்களெல்லாம் படித்தவர்கள். மேலும், அவர்கள் மாலை மரியாதை முதலிய விஷயங்களில் ஈடுபடுவதில்லை. அதனால் சண்டை வருவதில்லை.

அ—நன்றாகத்தான் சொன்னாய். உண்மையான படிப்பும், ஒழுக்கமும் உடையவர்களுக்குள் சமயச் சண்டை ஏற்படாது. சமயத்துக்கும் மாலை மரியாதை உரிமைக்கும் என்ன சம்பந்தம் என்று கவனித்துப் பார்! கோயில்களில் ஏதோ சில பணிவிடைகள் செய்வதற்குச் சில மரியாதைகளும் வருவாயும் பண்டைக் காலத்தில் ஏற்பட்டன. அக்

காலத்தில் பணிவிடை செய்தவர்கள் கல்வி அறிவு ஒழுக்கங்களில் மிகச் சிறந்தவர்களாக இருந்தார்கள். அக்காலத்து மன்னர்களும் சிமான்களும் அவர்கள் கல்வி அறிவு ஒழுக்கங் கட்கு மெச்சி அளவிறந்த வருவாய், மரியாதை முதலியன ஏற்படுத்திவிட்டார்கள். ஒழுக்கச் சீலர்களாக இருந்த பணியாளர்களும் வருவாயையும் மரியாதையையும் மிகை படக் கொள்ளாது இறுமாப் பெய்தாது பரோபகாரமாகவே செலவு செய்தனர். பின்னர் அவர்கள் வழி வந்தவர்கள் செல்வமிகுதியால் கல்வி அறிவு ஒழுக்கங்கள் குன்றி, வருவாய், மரியாதை, இறுமாப்பு முதலியவைகளிலேயே நோக்கமுடையவர்களானார்கள்.

மு—அவர்களேன் அப்படி ஆனார்கள்?

அ—செல்வ மிகுதியால் முயற்சிக்குறைவும், முயற்சிக் குறைவால் கல்விக்குறைவும், கல்வியின் குறைவால் அறிவு ஒழுக்கக் குறைவுகளும் வரும் என்பதை நீ அறிவாய் அன்றோ?

மு—ஆனால், கல்வி அறிவு ஒழுக்கங்கள் குறைந்தவர்களை ஏன் அப் பணிவிடைகட்கு வைத்துக்கொண்டார்கள்?

அ—இதில்தான் மனித சுபாவம் விளங்குகிறது. கல்வி அறிவு ஒழுக்கங்கள் குறைந்த காலத்துங்கூடச்செல்வ மிகுதியால் ஆலய அதிகாரிகட்கும் நீதி அதிகாரிகட்கும் உதவிகள் செய்து பணிவிடை உத்தியோகத்தில் தாங்கள் நிலைக்கும்படி செய்துகொண்டார்கள். பிறகு நீண்ட பழக்கத்தினால் வம்ச வழியுரிமை என்ற சட்டமும் ஏற்பட்டுவிட்டது.

மு—ஆனால், அந்தச் சட்டத்தை மாற்ற முடியாதோ?

அ—ஏன் முடியாது? தேவதாசிகளைப்பற்றியமட்டில் மாற்றிவிடவில்லையா? அதைப்போலவே செய்யலாம்.

மு—ஆகையால், நீ சொல்வது கல்வி அறிவு ஒழுக்கங் கள் உள்ளவர்களிடம் சமயப் பிணக்குக் கிடையாது என்பது. இது உண்மைக்கு மாருகவல்லவோ இருக்கிறது.

அ—ஏன் அப்படிச் சொல்லுகிருய்?

மு—நன்ருக ஆலோசித்துப் பார்! கல்வி அறிவு ஒழுக் கங்களிற் சிறந்தவர்கள்தானே மெய்கண்டதேவர், சங்கரா சாரியார், இராமானுஜர், மத்வர், பாஸ்கரர், நீலகண்ட சிவா சாரியார், வேதாந்ததேசிகர் முதலிய பெரியார்கள்?

அ—ஆம், அவர்கள் என்ன செய்தார்கள்?

மு—அவர்கள் கடவுள், உயிர், உலகம் என்ற மூன்று பொருள்களின் தன்மையையும் அவைகட்குள்ள தொடர் பையும்பற்றிக் கூறிய மாறுபட்ட கருத்துக்கள்தானே அளவில்லாத சமயப் போருக்கும் பிணக்குக்கும் காரணமாக இருக்கின்றன?

அ—இதோ, கடல் நிறத்தைப் பார்! நான் இதன் நீல நிறம் மயிலின் நீல நிறத்தைப்போல் இருக்கிறது என் கிறேன்; நீ என்ன சொல்லுகிருய்?

மு—இது ஆகாயத்தின் நீல நிறத்தைப்போ லிருக் கிறது என்கிறேன்.

அ—இவ்வளவுதானே. நமக்குள் கருத்து வித்தியாசம் இருக்கிறதே; நாம் அடித்துக்கொள்ளுகிருேமா? திட்டிக் கொள்ளுகிருேமா?

மு—இல்லை. கருத்து வேற்றுமையினுல் அடி திட்டு ஏன் வரவேண்டும்?

அ—இதைத்தான் உன் வாயிலிருந்து வெளிப்படுத்த எண்ணினேன். கடவுளுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பை இப் பெரியார்கள் பல உதாரணங்கள் மூலமாக

விளக்கினர்கள். அவரவர்கள் அறிவுக் கேற்ற உதாரணத்தைக் கொள்ளலாம். அதற்காக மற்றொரு கொள்கையுடையோரைத் திட்டவும் வேண்டாம், அடிக்கவும் வேண்டாம்

மு—பிறகு ஏன் சமயத்துறையில் அடி தடி உண்டாகிறது?

அ—முன்னமே சொன்னேன். கல்வி-அறிவு-ஒழுக்கக் குறைவினாலும், வருவாய் - மரியாதை முதலியவைகளைப் பற்றிய உரிமை-இறுமாப்பு இவைகளாலுந்தான் சண்டை வருகிறது.

மு—அதெல்லாம் போகட்டும். ஏன் திருநீறு அநாவசியமாக அணிந்துகொள்ளவேண்டும். எனக்கு அதில் நம்பிக்கை யில்லையே? காரண காரியங்களை அறியாத வரையில் நான் எதையும் நம்புவதில்லை

அ—இதுவரையில் நான் உற்றுப் பார்க்கவில்லை. கையில் பொன் சங்கிலியில் ஏதோ ஒரு சிறிய உருவப் படத்தைக் கட்டித் தொங்கவிட்டிருக்கின்றாயே. அது யாருடைய படம்?

மு—இதுதான் சுயமரியாதைத் தலைவர் படம். இந்தப் படத்தைப் பார்க்கும்போதெல்லாம் சுயமரியாதை ஞாபகம் வருகிறது.

அ—ஓ! ஓ! இது சுயமரியாதை ஞாபகச் சின்னமோ?

மு—ஆம்! ஆம்! நன்றாய்ச் சொன்னாய்.

அ—முருகப்பா! திருநீறும் அதைப்போலவே கடவுளுடைய அருள் தொழிலின் ஞாபகச்சின்னம்.

மு—அதென்ன எனக்கு விளங்கவில்லையே.

அ—உயிர்கள் மலங்களினால் கிலேபெற்ற இன்பம் அடையாமல் கஷ்டப்படுகின்றன. அம் மலங்களை ஞானச்

சுடர் கொளுத்திக் கடவுள் தம் அருளினால் போக்கி உயிர்களுக்குப் பேரின்பத்தைத் தருகிறார்.

அ—நீ சொல்வதைச் சரியென்று எப்படி நம்புவது?

அ—மிகவும் எளிய வழியில் சொல்லுகிறேன் கேள்! மனிதனுக்கு இருமாப்பு இன்பத்தைக் கொடுக்குமா ?

மு—துன்பத்தைத்தான் தரும். இருமாப்பு மனிதனுக்குக் கூடாது.

அ—தன்னுடைய சக்திக்கு அதிகப்பட்ட சக்தியின் முன்னிலையில்தானே அந்த இருமாப்புப் போகும் ?

மு—ஆம்; அல்லாவிட்டால் அது அதிகரிக்கும்.

அ—அறிவு வளர்ச்சியினால், இன்பத்துக்கு இருமாப்பு இடையூறு செய்யும் என்ற உணர்ச்சியோடு, அவ் விருமாப்பைப் போக்கவேண்டுமல்லவா?

மு—ஆம்! ஆம்! நீ சொல்வது என் யுக்திக்குப் பொருத்தமாக இருக்கிறது.

அ—இருமாப்பை மலமென்றும், பெரிய சக்தியைக் கடவுளென்றும், அறிவு வளர்ச்சியை ஞானச்சுடர் என்றும் வைத்துக்கொள்! இன்னம் பற்பல நுட்பங்களிருக்கின்றன. அவைகளை யெல்லாம் மற்றொரு சமயம் விளக்குகிறேன்.

மு—பசுவின் சாணத்தினாலாகிய திருநீற்றுக்கும் கடவுள் அருட் செயலுக்கும் என்ன சம்பந்தம் ?

அ—உயிர்களுக்குச் சாத்திர பரிபாஷையில் பசு என்று பெயர். உடம்பைப்பற்றியவரையில், மலம் எப்படி எல்லா நோய்கட்கும் காரணமாய் அருவருக்கத்தக்கதாய், அது ஒழிந்த காலத்து சுகம் உண்டாகிற தன்மை யுடையதாயிருக்கிறதோ அதைப்போலவே ஆத்மாவைப்பற்றிய வகையில் இருமாப்பு என்ற மூலமலம் துன்பம் செய்கிறது.

மு—நீ சொல்வது என் மனதைக் கவர்கின்றது. மேலே சொல்!

அ—இம் மூலமலம் அறிவுக்குமுன் நில்லா தாகையால் இது மிருக சுபாவம் அல்லது விலங்குத் தன்மையேயாகும் விலங்குகளிற் சிறந்தது பசுமாடு. ஆகையால், பசுமாட்டின் சாணத்தை இம் மூலமலத்துக்கு ஒப்பிடலாம். அதைத் தீக்கொண்டு கொளுத்துவதை, மூலமலத்தை ஞானத் தீயி னல் கொளுத்துவதற்கு ஒப்பிடலாம். கொளுத்திய பிறகு தோன்றுவது பரிசுத்தமான அருள் பிரகாசம். சாணத் தைக் கொளுத்திய பிறகு கிடைப்பது பரிசுத்தமும் வெண் மையும் ஒளியும் உடைய திருநீறு.

மு—நண்பனே! நன்றாய் உணர்ந்தேன். இவ்வளவு கருத் துக்களையும் உள்ளடக்கி * "மந்திரமாவது நீறு" என்று திரு ஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் கூறியது என் நினைவிற்கு வருகிறது.

அ—நானும் அதைத்தான் சொல்ல இருந்தேன். மூல மந்திரமாகிய பிரணவ பஞ்சாக்ஷரத்தின் தத்துவார்த்தத்தை விளக்குவது திருநீறு. அருள் வடிவான பராசக்தியின் உருவமாக விளங்குவதும் இதுவே. கோயிலில் சிவ பெருமான் அருளைக் கொடுப்பதற்கு அறிகுறியாகத்தான் திருநீறு கொடுக்கிறார்கள்.

மு—நண்பனே! உன் கையால் விபூதி கொடு! சிவச் சின்னமாகிய திருநீற்றின் உண்மையுணர்ந்தேன். வேற்றுமை யுணர்ச்சியினல்தான் சமயப் பிணக்கு வருகிறதே! பொழிய சின்னங்களா லில்லை யென்று ஐயந்திரிபறக் கண்டேன். நமஸ்காரம்.

சிவமயம்

* திருஞானசம்பந்த சுவாமிகள்

தேவாரம்

திருவாலவாய்-திருநீற்றுப்பதிகம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர் வாயுமைபங்கன் றிருவாலவாயான் றிருநீறே. க

வேதத்திலுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறு புன்மைதவிர்ப்பதுநீறு
ஓதத்தகுவதுநீறு வுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல் சூழ்ந்த திருவாலவாயான் றிருநீறே. உ

முத்திதருவதுநீறு முனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறு தக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறு பரவவினியதுநீறு
சித்திதருவதுநீறு திருவாலவாயான் றிருநீறே. ௩

காணவினியதுநீறு கவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறு மதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறு திருவாலவாயான் றிருநீறே. ச

பூசவினியதுநீறு புண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகெடுப்பதுநீறு வந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறு திருவாலவாயான் றிருநீறே. ரு

அருத்தமதாவதுநீறு வவலமறப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறு வானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்த திருவாலவாயான் றிருநீறே. ௬

எயிலதுவட்டதுநீறு விருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறு பாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறு சுத்தமதாவதுநீறு
வயிலைப்பொலிதருசூலத் தாலவாயான் றிருநீறே ௭

இராவணன்மேலதுநீறு வெண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறு பாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறு தத்துவமாவதுநீறு
வராவணங்குந்திருமேனி யாலவாயான் றிருநீறே. ௮

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கள் மெய்யது வெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவதுநீறு
வாலமுதுண்டமிடற்றெம் மாலவாயான் றிருநீறே. ௯

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறு கருதவினியதுநீறு
வெண்டிசைப்பட்டபொருளா ரேத்துந்தகையதுநீறு
வண்டத்தவர்பணிந்தேத்து மாலவாயான் றிருநீறே. ௧௰

ஆற்றலடல்விடையேறு மாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும் பூசுரன்ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்ற தீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சொக்காதேசுரர். தேவியார் - மீனாக்ஷியம்மை

இப் பதிகம் பாண்டியராஜனுடைய சுரவியாதி தீர
அருளிச்செய்தது.

ஸ்ரீ இ ரா ம லி ங் க சு வா மி க ள்

(திருஞானசம்பந்தர் தோத்திரம்)

உலகியலினு றமயலி னடைவுபெற மௌனதிதய
மொழிபெறவி ளங்குசுடரே
உதயநிறை மதியமுத முணவுபெற நிலவுசிவ
யோகநிலை யருளு மலையே
உனதுசெய லெனதுசெய லுனதுடைமை
எனதுடைமை யுணரெனவு ணர்த்துநிறைவே
உளவெனவு மிலவெனவு முரையுபய வசநமற
ஒருமொழியை யுதவு நிதியே
ஒன்றுடனி ரண்டெனவி தன்டையிடு மிண்டரொடு
மொன்றலற நின்ற நிலையே
உன்னலற வுன்னுநிலை யின்னதென வென்னுடைய
உள்ளுணர வுள்ளு மதியே
உன்னிலையு மென்னிலையு மன்னிய மிலைச்சிறிது
முற்றறிதி யென்ற பொருளே
உண்மைநெறி யன்மைதனி லுண்டுளமொ ருங்கிலென
ஓதுமெய்ப் போத நெறியே
அலகின்மறை மொழியுமொரு பொருளின்முடி பெனவென
தகந்தெளிய வருள்செய் தெருளே
ஐம்பூத மாதிநீ யல்லையத் தத்துவ
வதீதவறி வென்ற வொன்றே
அத்துவா வாறையு மகன்றநிலை யாதஃ
ததீதநிலை யென்ற நன்றே
ஆணையெம தாணையெமை யன்றியொன் றில்லைநீ
யறிதியென வருளு முதலே
அன்பென்ப தேசிவமு ணர்ந்திடுக வெனவெனக்
கறிவித்த சுத்த வறிவே
அத்துவித நிலைதுவித நிலைநின்ற பின்னல
தடைந்திடா தென்ற விறைவே
ஆனந்த மதுசச்சி தானந்த மேயிஃ
தறிந்தடைதி யென்ற நலமே
அட்டசித் திகளுநின வேவல்செயுநீ யவைய
வாவியிட லென்ற மணியே

இலகுபரி பூரணவி லாசமல திலபண்ட
மெங்கணுமெ னச்சொல் பதியே
இரவுபக லற்றவிட மதுசகல கேவலமி
[illegible] வென்ற [illegible]மே
இச்சைமன மாயையற் றுண்டனவெல் லாமவை
யிருந்தவா றென்ற தவமே
யான்பிற னெனும்பேத நடைவிடுத் தென்னை
டிருத்தியென வுரைசெ யரசே
என்கனக னேயெனது கண்ணேயெ னிருகண்
ணிலங்குமணி யேயெ னுயிரே
என்னுயிர்க்கு யிரேயென றிவேயெனறிவூ
டிருந்த சிவமேயெ னன்பே
என்றெய்வ மேயெனது தந்தையே யெனையீன்
றெடுத்த தாயேயெ னுறவே
என்செல்வமே யெனது வாழ்வேயெ னின்பமே
யென்னருட் குருவடிவ மே
கலகமன முடையவென் பிழைபொறுத் தாட்கொண்ட
கருணையங் கடல முதமே
காழிதனி லன்றுசுரர் முனிவர்சித் தர்கள்யோகர்
கருதுசம யாதிபர் களுங்
கைகுவித் தருகினின் றேத்தமு வாண்டிற்
களித்துமெய்ப் போத முண்டு
கனிமதுர மொழுகுசெம் பதிகச் செழுஞ்சொன்மழை
கண்ணுதற் பவள மலையே
கண்டுபொழி யருண்முகிற் சம்பந்த வள்ளலாங்
கடவுளே யோத்தூ ரினிற்
கவிஞற விளக்குநற் பணிகள்சிவ புண்ணியக்
கதியுல கறிந் துய்பவே
கரையற்ற மகிழ்விளைநெறி செய்தருள் புரிந்திடுங்
காட்சியே சிவஞா னியாங்
கருதவரு பொருதிருப் பெயர்கொண்மணி யேஎமைக்
காப்ப துன்கட னென்றுமே.

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்:—சென்னை 1929

இனம்! தமிழ் நூல் விலைப்பட்டி இனம்!!

புதிய சிறந்த தமிழ் நூல்கள்

ஸ்ரீ விவேகானந்தர் நூல்கள்

	ரூ.	அ.
1004 உபதேசமொழிகள்	2	0
எனது குருநாதர்	0	8
பதஞ்சலியோக ஸூத்ரம்	1	4
ஞான ரத்னவளி	4	10
பக்தியோகம்	0	12
கர்மயோகம்	1	0
இராஜயோகம்	2	4
வேதாந்த ரகசியம்	2	0
ஞானயோக ரகசியம்	2	4
வேதாந்த நிலைமை	0	6
ஸ்ரீராமதீர்த்த பரமஹம்ஸ விஜயம் 1-2 பாககள்	5	0
அருணகிரிநாதர் சரித்ரம்	0	2
அகஸ்தியர் ரணவைத்யம்	0	12
சச்சிதானந்த சிவம்	1	2
மோக்ஷசாதன ரகசியம்	4	0
வீரதீர பாஜி பிரபு	0	3

முருகன் புகழ் நூல்கள்

	ரூ.	அ.
திருமுருகாற்றுப்படை பரிமேலழகர் உரை	0	8
கந்தரந்தாதி மூலமும் வில்லிபுத்தூர் ஆழ்வார் உரையும் நூதனமுறை	0	12
கந்தரநுபூதி உரையுடன்	0	8
ஷை விரிவுரை கிளேஸ்	0	12
கந்தர்சஷ்டி கவசம் உரை	0	8
ஷை விரிவுரை கிளேஸ்	0	12
கந்தர் கலிவெண்பா மூலமும் விரிஉரையும்	0	8
பிரதோஷமகிமைவசனம்	0	4
விபூதி உருத்ராக்கமகிமை	0	6

	ரூ.	அ.
மாதர்நீதி (5-ம் பதிப்பு)	1	0
ஷை பெதர்வெயிட் (கலி)	1	8
சோதிட ஆசிரியன் (212)	1	0
தர்ம வாசகம் 32	0	3
நாமாவளி கதம்பம்	0	8
தமிழ்நாடும் நம்மாழ்வாரும்	0	4
ஒரு பெண்ணரசியின் பிரஹ்ம ஞானோப தேசம் (வசனம்)	0	8
ஆநந்தராமாயணம் 109 சருக்கங்கள், 12,252 கிரந்தத் தொகை, 9 காண்டம், 13 படம்	6	0
கைவல்ய மூலம்	0	4
திரிகடுகம்விரிவுரையுடன்	0	6
நீதிநெறி விளக்கம் மூலமும், விருத்தியுரையும் ஆங்கில மொழிபெயர்ப்புடன்	1	8
ஸ்ரீராமகிருஷ்ணவைபவம்	1	0
இந்து சங்கீதப் பாட்டுகள்	1	8
கணபதி ஷோடஸ நாம ப்ரதிபாத ஸ்லோகம், கணபதியின் அர்ச்சனைக்குரிய ஸுமுகாதி ஷோடஸ நாமாவளி, ஸ்ரீகணபதி அஷ்டோத்தர ஸதநாமாவளி, ஸ்ரீ கணபதி ஸஹஸ்ர நாமாவளி, ஸ்ரீகணபதி சதுர்த்தி பூஜாகல்பம் புதிய பதிப்பு(பாக்கெட்அளவு	0	4
மநுநீதி சதகம்	0	8

	ரூ.	அ.
ஸ்யாமளா தண்டகம்	0	1
ஸ்ரீ ராம ரட்சையின் மகிமை (ஸ்ரீவால்மீகிமுனிவர்) குசன் என்னும் பாலனுக்கு இராம ரட்சையால் அபிமாந்திரணஞ் செய்தது	0	3
ஸ்ரீ ராமகிருஷ்ண மகாத்மியம், ஸீதா மகாத்மியம், (இதில் விஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களிலும் இராமன் கிருஷ்ணன் என்னும் இரண்டு அவதாரங்களின் மேன்மையைப் பற்றி இரண்டு பிராமணர்களுக்குள் நடந்த சம்பாஷணை)	0	2
ஸ்தவராஜ[illegible]ம் சிவராம ஸ்தோத்திரம் [illegible]தாராம தத்துவ சம்வாதமென்னும் [illegible] பே[illegible] அல்லது (மெய்ஞ்ஞானபேட்டி)	0	3
விநாயகர் [illegible], சுப்பிரமணியர் பரம்பரிபதிகம், முருகர் அந்தாதி	0	3
ஔவையார் விநாயகர் அகவல், கபிலதேவர் மூத்தநாயனர் இரட்டை மணிமாலே, அருணகிரிநாதர், முத்திவிநாயகர்	0	2
முதுமொழிக்காஞ்சிஉரை	0	6
ஆதித்ய ஹ்ருதய முதலிய	0	2
ஸ்ரீ சுப்ரமண்யர் அஷ்டோத்தர சதநாமாவளி	0	3
இலகு ராமாயணம், ஸ்ரீ ராம உபாசனுக்கிரமோபதேசம்	0	4
ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம்	0	2
அபிராமியந்தாதி உரை	0	8
ஸ்ரீலலிதா அஷ்டோத்தர ஸஹஸ்ர நாமாவளி	0	3
ஸ்ரீ மீனுட்சியம்மை அக	0	1
வள்ளுவரும் மகளிரும்	0	2
ஸ்ரீராமாயணத்தின்சிறப்பு	0	1
பிரம வித்தை	0	8
நீதிநெறி விளக்கம் உரை	0	8
,, ,, (கிளேஸ்)	0	12
அம்பிகாபதிக் கோவை	1	0
விஷ்ணு சகஸ்ரநாமாவளி	0	3
அஷ்டோத்தர ஸத நாமாவளி	0	5
திரிகாலசந்தியாவந்தன மந்திரம்	0	6
ஸ்ரீராமாயணப் போராட்டம்	0	2
வேசி மக்கள் யார்?	0	1
கோயிலே இடிப்பதா? திருத்துவதா?	0	1
திருஞான சம்பந்தர் கொலேபாதகரா?	0	2
ஞாநோதய ஸ்தோத்ரத் திரட்டு	2	4
அஷ்ட பிரபந்தம்	1	0
கலியுகப் புலுகன்	0	8

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலே,
4/34, நயினியப்ப நாயக்கன் வீதி, பார்க் டவுன், சென்னை.

Printed at the "Satya Nesan" Press, Madras.—June, 1929